# பொருளடக்கம்


| | | |
|---|---|---|
| 1. | குமாரஸ்தவம் | 2 |
| 2. | திருநிறைந்த சிவம் | 5 |
| 3. | கந்தர் திருவாரம் | 18 |
| 4. | இடையறாதுநிற்கவிழைதல் (முதற்பத்து) | 28 |
| 5. | இடையறாதுநிற்கவிழைதல் (இரண்டாம் பத்து) | 34 |
| 6. | திருவருட்செயன்ஞாபகம் | 40 |
| 7. | வாழ்த்து | 46 |
| 8. | திருக்கந்தர் திருப்பல்லாண்டு | 47 |
| 9. | சண்முக நாமாவளி | 48 |

உ

திருச்சிற்றம்பலம்

# குமாரஸ்தவம்

1. ஓம் ஷண்முக பதயே நமோ நம :
2. ஓம் ஷண்மத பதயே நமோ நம :
3. ஓம் ஷட்க்ரீவ பதயே நமோ நம :
4. ஓம் ஷட்க்ரீட பதயே நமோ நம :
5. ஓம் ஷட்கோண பதயே நமோ நம :
6. ஓம் ஷட்கோச பதயே நமோ நம :
7. ஓம் நவநிதி பதயே நமோ நம :
8. ஓம் சுபநிதி பதயே நமோ நம :
9. ஓம் நரபதி பதயே நமோ நம :
10. ஓம் ஸுரபதி பதயே நமோ நம :
11. ஓம் நடச்சிவ பதயே நமோ நம :
12. ஓம் ஷடக்ஷர பதயே நமோ நம :

13. ஓம் கவிராஜ பதயே நமோ நம :
14. ஓம் தபராஜ பதயே நமோ நம :
15. ஓம் இஹபர பதயே நமோ நம :
16. ஓம் புகழ்முநி பதயே நமோ நம :
17. ஓம் ஜயஜய பதயே நமோ நம :
18. ஓம் நயநய பதயே நமோ நம :
19. ஓம் மஞ்சுள பதயே நமோ நம :
20. ஓம் குஞ்சரீ பதயே நமோ நம :
21. ஓம் வல்லீ பதயே நமோ நம :
22. ஓம் மல்ல பதயே நமோ நம :
23. ஓம் அஸ்த்ர பதயே நமோ நம :
24. ஓம் சஸ்த்ர பதயே நமோ நம :
25. ஓம் ஷஷ்டீ பதயே நமோ நம :
26. ஓம் இஷ்டி பதயே நமோ நம :
27. ஓம் அபேத பதயே நமோ நம :
28. ஓம் ஸுபோத பதயே நமோ நம :

29. ஓம் (வ்) வியூஹ பதயே நமோ நம :
30. ஓம் மயூர பதயே நமோ நம :
31. ஓம் பூத பதயே நமோ நம :
32. ஓம் வேத பதயே நமோ நம :
33. ஓம் புராண பதயே நமோ நம :
34. ஓம் (ப்)பிராண பதயே நமோ நம :
35. ஓம் பக்த பதயே நமோ நம :
36. ஓம் முக்த பதயே நமோ நம :
37. ஓம் அகார பதயே நமோ நம :
38. ஓம் உகார பதயே நமோ நம :
39. ஓம் மகார பதயே நமோ நம :
40. ஓம் விகாச பதயே நமோ நம :
41. ஓம் ஆதி பதயே நமோ நம :
42. ஓம் பூதி பதயே நமோ நம :
43. ஓம் அமார பதயே நமோ நம :
44. ஓம் குமார பதயே நமோ நம :

# திருநிறைந்த சிவம்
## அந்தாதி.

### *கலிவிருத்தம்.*

**தி**ருநி றைந்த சிவம்பிர மம்பரம்
அருணி றைந்த வதீதன் பராபரன்
குருநி றைந்த குகன்சம்பு வென்பன
பொருளொன் றாய்ப்பொலி வுற்று நிலாவுமால்.
1

**நி**லனி டத்தும்விண் கண்ணு நெருப்பிலும்
உலவைக் கண்ணு முயிர்க்கண் சுடர்க்கணுஞ்
சலிலக் கண்ணு நிறைந்தநின் றன்மையை
உலகிற் றேர்பவ ராருனை யின்றியே. 2

**இ**ன்று னேரடி யேத்துதல் போலவே
என்று நான்செய வேதமி லாவருட்
குன்றி லென்னைவை யாய்பகைக் கும்பெலாம்
வென்றி கொண்ட விறற்படை வீரனே. 3

**வீ**ர னேயடி யார்துயர் வீட்டுமா
தீர னேமறை தேடொரு தெய்வமே
ஈர வேறன்னை யேவுதி யென்னுடைக்
கூர மான கொடும்பவக் காட்டிலே. 4

**கா**ட்டு வாய்சகம் யாவையுங் கையகம்
சூட்டு வாய்மிடி யோர்க்குந் தொகாமுடி
ஓட்டு வாய்நமன் றன்னையு முள்கெனை
ஆட்டி னாயிலை யாரருண் மேவவே. 5

**மே**வு வோரறி மெய்ப்பொரு ளேனுநீ
தாவு ளேன்கணுஞ் சந்தத நின்றுளை
பாவி நானறி யேனின்ன பண்பெனத்
தேவ னேயறி யுந்திறல் செய்தியால். 6

**செ**ய்கை யொன்று மிலாமனின் சேவடி
எய்த நெஞ்ச மிகந்துன்னு வோரடி
பொய்ய னேன்றறி சித்தன்று பூத்தபூக்
கொய்த ருச்சிப்ப தென்றருட் குன்றமே. 7

**கு**ன்ற வில்லி குமாரமுன் னாணெடுங்
குன்றெ றிந்த குகாகொடுங் குற்சிதக்
குன்று பீறவுங் கூரயி லோச்சுதி
குன்ற வாணர் குரங்கயி லீசனே. 8

**ஈ**சன் வாமத் தியங்குமை மைந்தநின்
ஏசி லன்பர்கொன் னேகழிந் தாரெனக்
காசி னூல்கள் கதைத்திடக் கண்டிலேன்
தாச னேற்குஞ் சரண்டரல் வேண்டுமே. 9

**வே**ண்டு வார்துன்பு வீட்டுநின் றாள்கணான்
வேண்டி வேண்டி விவேக மிலாமிடி
பூண்ட பாதக னாகிப் புலம்புநீர்
ஆண்ட நீயறி யாய்கொலெ னத்தனே. 10

**அ**த்த மின்மனை யம்புவி யொக்கலும்
வித்தை யும்விவ காரமும் வேட்கையும்
செத்தி டுஞ்செவ்வி யென்செயுந் தீதிலா
அத்த னேநின தன்பொன்று காக்குமே. 11

**கா**க்கை யுண்ணுங் களேபரம் போலவீண்
ஊக்கத் தானொழி யாதரு ளூட்டியென்
நோக்கம் பூர்த்திசெய் வாயொரு நூனமில்
மோக்க வேட்கையர் முன்னரு ளையனே. 12

**ஐ**ய னேயர சேயழ கார்மயில்
வைய மீதிவர் வானவ னேயருள்
மெய்ய னேவிறல் வேலவ னேவெறும்
பொய்ய னேற்கினிப் போக்கிட மெங்ஙனே. 13

**எ**ங்கு முன்பதி யெங்குமுன் னாள்சதா
எங்கு முன்செய லாக விருந்துநான்
இங்கு வெந்துய ரேற்றிட லென்கொலோ
பொங்கெ ரிப்புழுப் போல வருந்தியே. 14

**வ**ருண வுற்பன்ன மங்குல் குழீஇநின்
றொருமு கத்தி லளப்பின்றி யூற்றல்போல்
அருண்மு கிற்றிர ளென்க ணனாரதம்
பரவி நின்று பனிப்பதெக் காலமே. 15

**கா**லன் மூரி கடாவிக் கணிச்சிகொண்
டால மென்னவந் தாவியுங் கொள்வனோ
ஞாலத் தேயுனை நாளுங் குரங்கிடிற்
சீல மேய சிவானந்த வாழியே. 16

**ஆ**ழி சங்க மமர்ந்தகை யண்ணலும்
நீழ லிண்டை நிலாவய னும்புகழ்
ஏழை பங்க னிளஞ்சுத வென்றுரால்
கீழ லென்றன்பர் கேள்கிள ராதியே. 17

**ஆ**தி யந்த மிலாப்பர மார்த்தவொண்
சோதி யாயவுன் சுத்த சுபாவத்தைப்
பேதை பெற்றன்றி யென்னொரு பேய்மன
வாதை தீருங்கொ லோவைய வந்தருள். 18

**அ**ருளி லாமனுக் குப்பை யெலாமுனைக்
கருத வுங்கருத் தொட்டுமொர் கையுமுன்
திருவு ளப்புரி வாற்றுதி செய்கிறேன்
இருளி ரிப்பதென் றோவறி யேனரோ. 19

**அ**றிவி னுக்கறி வாயரு வானதும்
குறிகு ணம்பல கூறுரு வானதும்
பொறிபொ லிந்துள பொன்னுல கானதும்
செறிய ருட்சிறப் பென்ப செழும்பொனே. 20

**பொ**ன்ன னந்தைபொன் பூண்மட வாணசை
தன்னை நாடி யழுஞ்சக சண்டியாம்
என்னை நீயிரண் டின்றி வளாவுநாள்
இன்னுந் தூரங்கொ லோவெங்க ளீசனே. 21

**ஈ**சற் கின்புள மைந்தவொ ரேதிலாத்
தாசற் கின்பரு டந்தை விடாவிசு
வாசத் தாலிங்கண் வாழ்த்திப் பராவுமென்
பாசக் கோளறப் பார்பர தெய்வமே. 22

**தெ**ய்வ மென்பது சிந்தை யடங்கினோர்
மெய்வி ழிக்கு வெளிச்சமென் றாமது
பொய்யி னிற்பவர் புந்திக்கு மெட்டுங்கொல்
ஐய பொய்யுழல் வேற்கென்னை யண்முமோ.
23

**அ**ண்ண லாரறி வாள ரவாமருட்
கண்ணே கண்மணி யேகரு ணாகர
விண்ணே விண்மணி யேயெனை மேவெனா
உண்ணி லாவினண் ணேன்கொலொ ருண்மையே. 24

**உ**ண்ணி குஞ்ச வுயிர்க்குயி ராயவென்
அண்ண லேயரு ளானந்த வெள்ளமே
எண்ண மோய்ந்த விடத்தி லிருக்கநான்
பண்ணும் பூசை பயிற்றலுன் பக்கமே. 25

**ப**க்க மற்றவ ரென்றுமிப் பாழுடல்
புக்கு வாழ்வதின் பென்பரப் புன்மையைப்
பொக்க மற்றவுன் பூரணங் கோடலே
தக்க தென்றெண்ணு நானினிச் சார்வனோ. 26

**சா**ர்வ காலமு முன்பெருந் தன்மையைச்
சேர்வ தாமொரு சின்மய வாதிக்கம்
சூர்ந ணாத சுகானந்த மென்பதின்
பார்க லாவல ராரு மறிந்ததே. 27

**ஆ**ரெ னக்கதை யன்பொடு மாக்குநர்
ஆரெ னக்கதை யாகலை செய்குநர்
ஆரெ னக்கதை யாக்குந ரென்றுநான்
ஆரை நித்த மலட்டுகின் றேனரோ. 28

**அ**ரனன் றாலினல் லந்தணர் நால்வர்கட்
குரனொ டோதலின் றோதிய வுண்மையைப்
பிரமை யோடுணர் வோர்பெந்தப் பேறெலாம்
திரண மாநினை யார்கொனற் றெய்வமே. 29

**ந**ற்ற மிழ்க்கலை நாதனென் போன்பரி
வுற்று வேண்டுமெய்ஞ் ஞான முணர்த்தியன்
றற்றந் தீர்த்தவ னேயரு ளானெனைப்
பெற்றி லேனின தன்பினைப் பெற்றுமே. 30

**பெ**ற்ற தாயும் பிதாவும் வெறுப்பரால்
உற்ற வேவ லுஞற்ற றவிர்ந்தக்கால்
இற்றை நான்செய்குற் றேவலை யின்னதென்
றற்ற மில்லை யளித்தென்னை யாண்டுகொள்.
31

**கொ**ண்ட கொள்கைக்கொ ரூன மணைந்திடா
தண்டர் நாயக னேயரு ளாற்றினீ
அண்ட மெண்டிக்கு மாநிறை யாற்றலைக்
கண்டு எங்களி கூர்வலென் கண்ணிலே. 32

**க**ண்ணி லானருங் கல்விகற் றென்பயன்
தண்ணீ ரென்றிடிற் றாக மடங்குமோ
விண்ணு மண்ணுந் தொழாகொனின் மேதகத்
தண்ண லம்பெறிற் றன்னிலை தன்னிலே. 33

**த**ன்ன கந்தனிற் றன்னிசங் கண்டபின்
தன்னை வேறெனச் சாற்றவுந் தாவிலா
உன்னைத் தானென வோதவு மொவ்வுமோ
இன்ன தென்றியம் பாததொன் றின்றரோ. 34

**இ**ன்றிவ் வாறுசொ லெண்மை யுளேனிலை
நின்று சாதித்து நெஞ்ச மொடுக்கிலேன்
பொன்றி டாதுபொன் றிக்கதி புக்குய்வான்
என்று வாலரு ணீட்டுவை யெந்தையே. 35

**எ**ந்தப் பூசனை செய்யினு மென்னுழல்
சிந்தை யொன்று திடப்படிற் சித்தியென்
றந்த வேத மறைந்திட வில்லையோ
கந்த னேகரு ணைப்பிரகாசமே. 36

**கா**சி போந்தவ ருங்கறை செய்வரேல்
ஆசி லாதபொன் னாடு மடைவர்கொல்
ஆசை யாம்புது நாடல கங்கெடின்
ஏசி லாச்சுக மெய்தறி வோங்குமே. 37

**ஓ**ங்க லோங்குஞ் சுரத்துழி யூண்டுயில்
நீங்கி மேலவர் நிட்டை பொருந்தியும்
பாங்க றாத்தவம் பண்ணியு நிற்கிறார்
தீங்கி னேற்கொரு செய்கையு மில்லையே. 38

**இ**ல்லி னைத்துறந் தேகினு மென்மனத்
தொல்லை நீங்கினன் றோசுக மெய்துமஃ
தில்லை யேலங்கு மிட்டளந் தோன்றுமால்
ஒல்லை யெந்தை யொடுக்கென் மனத்தையே.
39

**ம**னது கூம்பினிஞ் ஞால மறைந்துபோம்
எனும் விவேகமெற் கீந்தனை யின்னமும்
எனைம றந்தெனை யெய்த விழைத்தியால்
அனக பூரண மானது வாய்க்கவே. 40

**வா**ய்க்கு மின்பென வாழ்த்துநி னன்பரை
ஏய்க்கு மோவிவ் விருஞ்சக மாயையும்
பேய்க்கு ணஞ்செய்து பேதக வாசைதந்
தேய்க்க வுள்ளது மென்மன வல்கலே. 41

**அ**ல்லு மெல்லு மகத்தி லுனைப்பதித்
தல்ல லற்றம லானந்த பூமியின்
எல்லை யைக்கண் டவர்க்கிங் கொருசெயல்
இல்லை யில்லை யெனச்சொலும் வேதமே. 42

**வே**தஞ் சொற்றது மெய்யுறழ் வேயதைப்
போத மற்றவென் புன்மன தாற்பெறற்
கேது மற்றவ னென்றறி வாய்நவில்
வேத முந்துணை பேணு விசாலமே. 43

**வி**சுவ வின்பினும் விண்ணுல கின்பினும்
உசித மாவ தொருங்குப கன்மமும்
விசம மாக விடுத்தரு ணிட்டையே
நசைஇ நின்னடி நாடி நிலைப்பதே. 44

**நி**லைநி லாமை நினைந்துதிப் பஞ்சியே
குலைகு லைந்து குரைக்கின்ற துள்ளமென்
தலைவ னீயிருந் துந்தமி யேனினம்
அலைய லாங்கொ லருட்குரு நாதனே. 45

**நா**த னேயுனை நாடி யிருக்கையிற்
சீத வேந்தனைச் சேண்புயன் மூடல்போல்
தீதெ லாம்வந்து சிந்தைமொய்க் கின்றவே
நீத மில்லைகொ னின்னரு சில்லரோ. 46

**அ**ரச னுக்கடங் காக்குடி யேய்ப்பவென்
இருத யத்திற் கிணங்கி நிலாக்கொடுங்
கரவு நெஞ்சமுங் கண்ணுங்கொ லோநினைப்
பரம னேயருள் பாலிக்க வேண்டுமால். 47

**வே**ண்டி யன்று விசாலப் பவக்கடல்
தாண்டிக் கண்டனர் சந்தத ஞானிகள்
ஆண்ட நீயென்க ணன்புவைத் தாலதைக்
காண்டல் கக்கிஷ மோகருத் தொத்தரோ. 48

**ஒ**த்த நீர்மை யுறாதவர் தம்மனம்
பெத்தத் தாலுரு வாமெய் பிறங்குயிர்
முத்த ருக்கரு வாம்பர முத்தருக்
கத்த வுன்னரு ளாலவை யில்லையே. 49

**இ**ல்லா னென்னறி வில்லாத பேதைபோல்
நில்லா துன்னடி ஞேயத்தில் வைத்தருள்
அல்ல றீர்த்தரு ணைப்பெய ரான்சொலுஞ்
சொல்லிற் காசைகொ டூத்திருத் தோன்றலே.
50

# கந்தர் திருவாரம்

## *கலிவிருத்தம்.*

கயமா முகவைங் கரனார் துணைவா
உயர்சீர் விடையே றுமையா டனயா
தயவா யருளே தரவா தணியா
நயமா னசுகோ தயநா னுறவே. 1

அடிநா முடியின் றழியா வெளியாய்
மடியா வுருவாய் மறைநா யகமாய்
வடிவே லரசாய் வளர்வா கையனே
அடியே னிறையா யருடந் தருளே. 2

இரவும் பகலு மெளியே னுரியோர்
பரவுங் கழலைப் பணியும் படிநல்
அருடந் திடுவா யகிலந் தொழவே
வருமஞ் சிகியில் வரும்வா னவனே. 3

**அ**சுரர்க் கிறையீ டழியப் பணிவாழ்
நிசிதக் கரவே ணிலவத் தமியேன்
கசிவுற் றசொன்மா லைகணித் தணிவான்
உசிதத் தொடுவந் தருளுத் தமனே. 4

**தே**வா வுனைநா டியபின் றிணையில்
மூவா சைகெடும் படியான் மொழியும்
பாவா வனசெம் பயனாம் வணமால்
மேவா தருளாய் மிடல்வே லவனே. 5

**பா**வக் கடலிற் படியோ ருயிர்தான்
நாவிற் பெயர்மந் திரமே நவிலின்
தேவர்க் கருமா டுறுமே சிறியேன்
பாவிற் கருளா தெனைபா வகியே. 6

**பெ**ண்ணா கியபே யெனைவந் துபெரும்
புண்ணா கியநீர் பொசியுங் குழியின்
கண்ணே தளுமோ கழல்கொண் டபினும்
விண்ணா டர்பரா விகல்வே லரசே. 7

**எ**ல்லா மதமுங் கரைகண் டிடநீ
வல்லாண் மைபுரந் தலர்வா ளிமதன்
பொல்லா மயலிற் புகவே புரிநீர்
உல்லா சமகா குகனே யுரையே. 8

**கா**மக் கனலிற் கருகுந் தமியேன்
சாமிக் கடிமைப் படவுந் தரமோ
பூமிக் குளுனைப் புகழ்வோ ரையரும்
பூமிக் குள்விடும் பொருவே லிறையே. 9

**இ**ச்சைக் கடிமைப் படுமென் னுழையுன்
செச்சைச் சரணந் திகழும் படியுள்
மெச்சித் தகவீ திகெடா விறல்சால்
பச்சைப் பரிமேல் வருமெம் பரனே. 10

**இ**ரவும் பகலும் பிரியா வெனுடை
யரசே யிதுநா ளஞர்நா னுறவென்
றொருதே வுளதோ வுனையன் றயரத்
தெரியே னெளியேன் மயிலூர் சிவனே. 11

**ம**னதா ரவெனுண் மயிலூர் குகதோம்
தனையா டியதின் றிலைமுன் றளையாம்
வினைவா தனைவந் தெனைமே யினதால்
கனவாய் முடியத் தருவாய் கரமே. 12

**மை**யார் கலிசூழ் மகிநின் னொருவி
நொய்யே னுயுமா றுளதோ நுவலாய்
மெய்யா ரடியார் விழையஞ் சரணா
துய்யா முருகா சுபசோ பனனே. 13

**எ**ளியே னுளமிங் கெதிலென் பதைநீ
தெளிவா யறிவாய் சிறியே னிதயம்
களிகூ ரருள்கூ ரவெணாய் கழுதுண்
அளிநீ பமிகப் புனையம் பரனே. 14

**எ**ந்தா யெளியே னிகலா மிடரால்
நொந்தேன் மிகமே னுதிசே ரருடான்
தந்தா ணெடுவாழ் வுடையந் தரியின்
மைந்தா குமரா வடிவே லவனே. 15

**நி**லைமே னினையே நினையா துவயா
அலைவோ ரெவரோ வவர்தா மவிவார்
பலநா ணினையே படர்நா னுமிவண்
வலைமீ னெனவா தலென்வேன் மனனே. 16

**த**ரையோர் புகழும் படிதந் திரமாப்
புரிவோர் புணியம் பலியா ததுபோல்
தரைமீ நினையே கருதுந் தவமும்
விரைவா யிறுமோ மிளிர்வேன் மனனே. 17

**ப**ணியா பரணன் மகிழும் படிநீ
திணிஞா னநிஜஞ் சொனதீர் வையினால்
அணிமா தியருந் தொழினின் றுமதே
துணிபா குமனா மயதூ யவனே. 18

**ச**ன்மப் பிணியைத் தணியச் செயுமுன்
நன்மைத் தயவா மமிழ்தத் தினைநான்
தின்னப் பணியாய் திருவாழ் குறமின்
தன்னைத் தழுவுந் தனிநா யகனே. 19

**வா**சங் கமழ்பா தகுகா மறவா
நேசம் பணியுண் ணிறைபே ருணர்வின்
தேசந் திகழச் சிவயோ கமதைத்
தாசன் பெறுவா னருள்சந் ததமே. 20

**கா**னங் குறமா திதழ்மா கனியின்
தேனுண் டகுகா குழகா தெருளோர்
கோனென் றுளவே லவனே குயினான்
ஞானம் பெறவோர் நடனம் புரியே. 21

**ஆ**தா ரவுனோ டணவென் றனைமேல்
நீதா நிலைநின் றிடமூ டருளைத்
தாதா வெனவே தனிவா துசெயும்
போதோ வருள்வாய் பொருவே லிறையே. 22

**வி**த்தைத் திறமே துமிலா மிடியேன்
கத்திக் கதறிக் கழல்பா டவருள்
வைத்தெற் குணர்வா யதுபோன் மறையாச்
சித்திற் குளும்வைத் தருள்சே யவனே. 23

தருவார் தருவார் சரணங் களையென்
றிருபா தமிறைஞ் சிடுவோர் புலவாம்
உருமே வுவரோ வுயர்வீ டிலராய்த்
திருமான் மருகா சிவசே யவனே. 24

முகமொன் றுரைமுன் முகமொன் றருண்முன்
முகமொன் றமர்முன் முகமொன் றொளிமுன்
முகமொன் றிருநங் கையர்மா முகமுன்
முகமொன் றடியார் முனநின் றிடுமே. 25

முகமொன் றுயர்விண் முகமொன் றொருகீழ்
முகமொன் றுதெனா தொருமா முகமேன்
முகமொன் றுவடா ததமோர் முகமென்
முகநின் றருள்சண் முகவற் குளமே. 26

சுரம்விண் டுநிலங் களினுந் தொழுவோர்
உரனெவ் வணமவ் வணநின் றுதவுங்
கரமுஞ் சிரமும் பலவே கருள்போழ்
அரன்மைந் தனெனுங் குகனுக் கறிவே. 27

**ஈ**சன் குணமெண் குணமென் றிறைநூல்
பேசெண் குணமும் பிரியா விறையோன்
நாசஞ் சனனஞ் சரைநா குமிலாத்
தேசந் திகழ்சண் முகதே வுளமே. 28

**த**வமே நிமிருட் சமயந் தனிலூஉம்
அவமே பயின்மற் றதிலும் பொதுவாய்
எவனின் றுளனோ வவனே யெனையாள்
சிவனென் றறையுஞ் சிவசண் முகனே. 29

**நா**வன் மையுளோர் நவிலெண் ணறுமாப்
பாவண் மையினும் படியா தவனாய்க்
காவென் பவர்தந் துயரங் கடியெந்
தேவென் றுளவே லவனே சிவனே. 30

**சீ**ர்வே தகுலன் றிருநா விறையோன்
ஆரூ ரனறா வருள்வா தவுரான்
ஆரார் தமிழின் பறியா தியிறால்
ஊர்வா னவனே யொருசே யவனே. 31

**தி**ருமா லயனெண் டிசைநின் றுளரும்
செருவா னவருஞ் சிவசங் கரனார்
உருவென் றுணர்வோ ரறிவா யொளிரும்
ஒருகந் தபிரா னுயிர்நா யகனே. 32

**கா**லுஞ் சிலையுங் கலிசா றனுவும்
சீலந் திமிர்தஞ் சிரமீ திடுவோர்
கோலங் களுணர்ந் துளமே குளிர்வோன்
பாலன் குமரன் பதமே கதியே. 33

**ஆ**தா ரபிரா னருணா டுநர்கட்
கோதா மொழியா லுபதே சமருள்
மீதா னபரா பரவே லவனை
நீதா னெறியாய் நினையாய் மனனே. 34

**ஆ**லா சியமான் மியவா டலெலாம்
வாலா மையின்மா வளஞா னகிரிப்
பாலோ ரிறைகா ணவெனப் பணினோன்
காலா யுதகே தனபுங் கவனே. 35

கீரன் சுகனோர் கிளரொள் ளருணைப்
பேரன் குகன்வீ ணைவரன் பிரமன்
சூரன் முசுமா முகனீள் சுகமே
சேரும் படிசெய் பவனென் சிவனே. 36

# இடையறாதுநிற்கவிழைதல்

(முதற்பத்து)

*எண்சீர்க்கழிநெடிலடியாசிரியவிருத்தம். (இசை)*

**அடியொன்றற்கிருபத்துமூன்றக்கரம்.**

*5,6,7,8 – ஆஞ் சீர்கள், தம்முள் வண்ணம்.*

**வே**ரி நீபமார் தெரியன் மார்பவோம்
　　விதிசெய் சித்தெனை　யுதவு கர்ப்பமுள்
சூரி லேவெளிப் படுகை யிற்பினே
　　தொடர்பி ணிக்கணே யொருகு ளத்தினாழ்
நீரி லேசிறார் பயில்ப ளிக்கணோர்
　　நெடியன் வீழ்த்தலின் முடிபு ணாய்ப்படும்
பீரி லேபுரந் தருளி னாயிஙன்
　　பிழைபொ றோமெனின் விளைவ தேதுகொல்.
1

தீப பந்தியா யுரைசெய் பண்டிகைச்
செயலி னேவெடி யுறலி னேதலை
நாபி யந்தமுங் கனன்ற துன்பிலே
நடுநி சிக்கணோர் குறடு தத்துகால்
மாப லத்தயிற் கவைக்கொ துங்குமோர்
வகையி லேயுயி ரருளி னாயிஙன்
கோப மேபுரிந் தொதுங்கி னென்செய்கேன்
குழக னாதனே குமர நாதனே. 2

தந்தை சிந்தைதான் வருந்து மென்னுமோர்
சலத்தி னஞ்சைநா னுணக்கொ ணர்ந்தகால்
தந்தை சென்றபின் பெனைவ ருத்துவார்
தமைச்செ யிக்கநா னினைத்த பிற்பொலாச்
சிந்தை யாரெனா துளம்வ ருந்தவே
திரவி யம்பெற வனைபல் வம்புகள்
வந்த கான்முனே யணைந்து காத்தநீ
மறக்கு மாறெனே மலர்க்கை வேன்மனே. 3

**அ**த்த மேபெறற் கெனைப்பி டிக்கவென்
றயர்மு யற்சியி லெனையி சைத்திலை
செத்த மேனிபோல் வமன பேதிநோய்
திளைத்த போதுநீ றளித்து மேவினாய்
பத்தர் வாழுமூர் முகவை யிற்சிறைப்
படுத்து வேனெனா மிழற்றி னாரையே
சுத்த போதியென் றெனைவி டச்செய்த
துறைவ நீயிஙன் மறைவ தேதுகொல். 4

**சொ**ன்ன தீர்வையைப் பெறுமு னேயெனைத்
துயிற்றி யேநவ சிலைக்கண் மூழ்கெனப்
பன்னி யன்னவா றிவனு மாடலிற்
பழிகள் பேனென வொழிய வாடினை
பின்ன ரந்நகர்த் தலைவர் நீதியைப்
பிழைத்து மாபொருள் பெறச்செய் காரியம்
மன்னு றாதுசெய் தருளி னாயிஙன்
மறப்ப தென்னைவேல் பிடித்த சொன்னமே. 5

**அடியொன்றற்கிருபத்துநான்கக்கரம்.**

**மு**டிந்த தீர்வைமே லுயர்ந்த தாக்கனோர்
முயன்ற போதுநான் மயங்கு றாமனீ
இடந்த ராதுவே றிதனை நோக்கெனா
வினிது தீட்டியோர் முடிவு காட்டினாய்
விடிந்து போமுனே மதுரை நீதியார்
விளம்பு தீர்வும விதங்கு லாவிய
துடங்கு கோடலின் றிஙன்வி டுப்பையோ
வுயிரி னாதனே யயிலி னாதனே. 6

**கொ**டிய கோடையிற் சுடும ணற்கணே
குருதி பாயவெ னடியி லேறுமுள்
வடிக ணீரிலே நனைத லுள்கியம்
மழவ னுக்கணி குறட ளித்தியென்
றடியை நாடுமோர் தபதி பாற்புகன்
றருளோர் தண்ணளி யிறைவ வென்னையும்
மிடிய னாகவே விடுவை யோவயின்
மிளிர்கை யாளியே விபுதர் மீளியே. 7

இவணி ருந்திடின் மனம டங்கிடா
தெனத்து ணிந்துநா னிசைத்தி ருந்தபா
உவகை யோடுமேன் மனைய மர்ந்தியா
னுரைத்த போதுநீ புறப்ப டேலறாக்
கவன மோடிரா யெனமொ ழிந்துபின்
கரந்த வென்னொரு கரும்பு கண்ணறை
அவல மெய்தவோ புரிவை நீபமார்
பழக னேயறா மழவ னேசொலாய். 8

நிலவ ளந்தரும் பிரப்பை யீமமா
நிலனி ருந்துநா னினைநி னைந்தபோ
தலகை யைந்துநா ளெனைவ ளைந்துபே
மதுவி ளைத்தகா லவைது ரத்தினாய்
வலய வாவிபோ லணுகி யென்னைமேல்
வருதி யென்றெழல் புரிவி யந்தரம்
விலக வேசெய்தை யிஙன நீயெனை
விடுவ தென்கொல்சூ ரடும டங்கலே. 9

**அ**றுதி னத்திலே மனம டங்கிமே
லணுகு நாளிரு முனிவ ரோடிகல்
உறுக ணேதமில் வடிவ னாகிவந்
துரைத்த வுன்பறை பிடித்த வென்றனை
இறுதி வைகன்முப் பதுட னைந்திலே
யெழவ யர்ந்தவொர் களைக ணிங்கெனைத்
தறுக ணாளர்போற் கழிப்ப தென்புகழ்த்
தமிழ னீசனே யவிர்கு கேசனே. 10

---

# இடையறாதுநிற்கவிழைதல்.

(இரண்டாம் பத்து)

*எண்சீர்க்கழிநெடிலடியாசிரியவிருத்தம். (இசை)*

அடியொன்றற்கிருபத்திரண்டக்கரம்.

5,6,7,8 – ஆஞ் சீர்கள், தம்முள்வண்ணம்.

**சீ**ர்த்த செல்வர்வா ழூர்பி ரப்பையென்
    றிணையை நீங்கிநீ ரணவு பாம்பனேய்
கூர்த்த வுள்ளுளா ரோடொர் வற்சரங்
    குலவி நின்றுதா யவள்பி றந்துளார்
நார்த்த வில்லினாண் மக்க ணட்பெலா
    நழுவ வேகியோர் கிழிச லோடுனோர்
பூர்த்தி நல்குதா ணம்பி னேனெனைப்
    புரந்தி டாய்கொலோ கடம்பின் மாலையாய். 1

**ந**ம்பு நான்முனே சொல்பி ரப்பையே
நணுகி யேகுகா லனையுள் வாடினாள்
எம்பி ரான்குகன் றன்னை நம்பனோ
னிதய நின்றதே முதிரு மென்றுபோய்
அம்பி றங்குநா டால வாய்சென்முன்
னடல்கொள் பண்டியா லடிம டங்கியே
வெம்பி வாடலிற் காத்த நீயிஙன்
விடுகை யென்கொலோ முருக நம்பியே. 2

**செ**ன்னை சேர்முனே யவ்வி ராவவ்வூர்த்
திருவி னேர்கொனார் தவமு ளாள்கனாத்
தன்னி லென்னுடம் போடு நின்றனந்
தருதி யென்றுநே ரருளி யந்தவீ
டென்னை யெய்துமா றாற்றி யங்குளா
ரெவரை யுந்தொட ரடிமை கொண்டனை
பொன்னை யாவிங னீத்து நிற்பதென்
புரையி ருப்பினு நிறைவி ழைத்தருள். 3

**மா**சின் மந்திரப் பேர்ந கர்க்கணான்
    வதியு நாள்விடா விரும னோயையே
ஏசில் பண்டிதஞ் செய்து தீர்த்தசெந்
    திநகர் மன்னையா வெழில்கொள் சென்னைசேர்
வாசி யானகா லூரு மீதுகோண்
    மருவு கட்டிநை வுறந லற்புறை
பூசி நின்றவோர் பிள்ளை யேயிஙன்
    புரிவி லார்கள்போன் மறைவ தேதரோ. 4

**ம**ற்றொர் காலைவெங் காது நோயினை
    மருவி வாடினே னுறுவை சூரியால்
அற்ற மெய்தினே னங்கு முன்றயா
    வணைந்த ளித்ததே குடந்தை யிற்சிகா
துற்ற மன்பதைக் குண்ணெ ருங்கிநா
    னுயிர்த்த துன்செய லெனற்கு மென்றடை
இற்றை நாண்மறந் தாலுய் வேன்கொலோ
    விறைவ னேவெல்வே லிறைவ னேவிடேல். 5

**யா**க்கை யேபனிப் பென்று சென்னைவிட்
டெறுழொ டேகியொல் குறுமொர் கானிலுன்
நோக்கி னாளிரண் டொன்று காறுமூ
ணுகர்வில் வெப்புமேர் நிகழொர் குப்பமே
பார்க்க வுற்றபோ தூணில் புன்கணும்
படிய வேவனை கடவு ளேயெனைக்
காக்க வென்னொடும் போத ருந்தனிக்
களைக ணேயிநா ளுளைவ தேதரோ. 6

**வா**ர்வி சாகனூ ரேய்து யர்க்கணும்
மதனுய் காசிவா னதியின் மேலிராக்
கார்பெய் காலையும் வேறு மோர்நிசிக்
கணிறை சோனையின் மதுரை வீதியிற்
சூர்கொள் காலையுஞ் செய்ச காயமென்
சொலில டங்குமோ விஙன மன்பிலாப்
பேர்கள் போன்மறைந் தாலுய் வேன்கொலோ
பிரச வோதிநீ ளிருவர் காதலே. 7

**கா**ட்டு மன்னனா ரூருய் வைணவர்
கடிதி னென்னையே கொலைசெ யெண்ணமே
கூட்டி னாரதுந் தில்லை பின்னைவாழ்
குடில நாமர்கள் கொடிய சூனியம்
ஊட்டி னார்கொலற் கேயஃ துங்கெடுத்
துவகை செற்றுலா மவர்வ ழக்கெலாம்
ஓட்டி யேயெனக் கீந்த வென்றியிவ்
வுலகு கூறுமே யலகில் வேன்முதால். 8

**அ**வ்வ ழக்கெலா மாந்தொ றும்விசா
ரணையி லெற்குமோர் தவிச ளித்துநேர்
எவ்வ ருத்தமும் பொன்ற வாண்டவா
வெழிலி றாதுலாம் வளைய லாளிலாம்
செவ்வை மார்க்கநா னேகி ராவிலே
திருடர் கைப்படா தெனையு நட்புளார்
எவ்வ ரும்புரந் திட்ட தண்ணளீ
யிஙன்வெ றுப்பையேல் கதழ்வ டுக்குமோ.
9

அன்பர் வாழ்சிவக் குன்றி ருந்துமா
லணவு நன்னரே பெருகு சென்னையே
இன்பொ டார்தலுந் தாள்கு றங்கிலே
யிரணம் விஞ்சுமா பிளவை கண்டுநான்
துன்பு கூருநா ளுண்ம கிழ்ந்துளோர்
துயரு மாறினி தருளி னாயிங்ஙன்
அன்பி லார்கள்போ னிற்றல் யாணரோ
வருணை நாதனேர் மருவும் வேதனே. 10

---

# திருவருட்செயன்ஞாபகம்

*எண்சீர்க்கழிநெடிலடியாசிரிய விருத்தம்.*

இரண்டுசீர்வண்ணம்.

**ந**ல்வி நயவரர் பெருமவென் னறிவே
நவிர மிவர்பெரும் பரமவென் னுயிரே
கல்வி பயினல நீத்திள மையிலோர்
கரிசில் வெள்ளியி னுதயநின் மீது
பல்க விதைநனி பாடிட வருள்செம்
பறம்பன் பெயரும்வைப் பேனென வெணிநான்
சொல்க விதையது கங்கையென் மொழியிற்
றொடங்கு மங்கல முணர்ந்துபின் மகிழ்ந்தேன்.
1

**பா**டி யேயறி யாவெளி யேன்வாய்
    பாட லுன்கிரு பையெனவு நினைந்தேன்
நேடி யேயறி யாதவென் னினைவு
    நினைநி னைந்திடல் கருதியு மகிழ்ந்தேன்
பாட லோர்சத மாயபின் றேவைப்
    பனவன் மாதவன் சயதச மியிலுன்
பீட றாமனு நல்கவென் னிதயம்
    பிடித்த துங்குக நினதரு ளன்றோ. 2

**வ**னப்பு மிக்கவொர் சைவரென் கனவில்
    வந்தெ னைக்கொடு போய்ப்பய சடிசில்
இனிப்பு றப்பிசைந் தனரதை யென்னோ
    டினித ருந்தியு மேகின ரதுதொட்
டுனைப்ப ழிச்சிடு கவிதையு நூலோ
    ருணர்வும் வளர்ந்தன விவையுமு னருளே
தனிப்ப திப்பொரு ளேதிரி புரத்தைத்
    தகித்த புன்னகைச் சண்முக சிவமே. 3

**பி**ன்ன ரப்பன வன்சொன படியோர்
    பெண்ணை மணந்தன னவளுநல் லவளே
என்னி லற்புடைத் தந்தைபொன் றிடலு
    மில்லின் காரிய மெனைநனி சூழ்ந்த
அன்ன நற்பகல் கமலனென் முனிவ
    னருந்த மிழ்ப்பனு வலிலெனைக் குறித்துச்
சொன்ன கட்டுரை யுணர்ந்தன னதுவுஞ்
    சுரேச நின்செய லேயென நினைந்தேன். 4

**இ**யல்பி னேமறை வாகியென் மாட்டே
    யிருந்த தூஉமப் பனுவலிற் கண்டேன்
உயர்வொ டோமனைப் பாடிடு வான்பல்
    லொண்மை நூல்குயில் வான்பல சீடர்
இயலொ டார்குவ ராடலி றுறவா
    மிவன்க ரத்தொர்க பாலிமுக் கோணக்
கயிலை யிரேகையென் றதுசொன தானீ
    கடவு ளாயது மூழ்வழி யன்றோ. 5

புந்தி கடினமி லாதுறற் குப்பைப்
    புளியை நீக்கியுண் டேனிருங் காஞ்சி
வந்து நினதொரு கோட்டம தணைவான்
    மனமு வந்தது காட்டின வளியை
எந்த வழிமறப் பேனுயிர்த் துணையே
    யெம்பி முத்தையப் பெயருடை யானென்
சொந்த தவநெறி பழித்துவை வேற்றுத்
    தொலைந்த தையுமறிந் தேன்குக தேவே.
6

ஆன்மப் பேறடை காரணந் துறவை
    யடையு மாகவி படித்திடு ஞான்றவ்
வான்மப் பேறென தருளிலின் றோவென்
    றறைந்த தண்ணளிக் குகவருங் காசி
வான்மைப் பேழ்மடத் திரண்டுகல் லாடை
    வழங்கி னதுந்திரு வல்லியங் கேணி
நான்மற் றார்பொழு தெட்டணை தினமெண்
    ணான்வி ளிந்தது நான்மறப் பேனோ. 7

**பி**ன்னை தனிற்பகை நாரணப் பெயரான்
    பெரிது மிகழ்ந்தெனைத் தன்மத தருக்கந்
துன்ன வழைத்தனன் யானுமவ் வாறே
    துணிந்த போதவன் மறைந்துபொல் லாங்கு
முன்னி யுருத்தனன் யாரிடம் பிழைதான்
    முளைத்த தோவவன் வாயிலிம் மணல்வீழ்
கென்ன வெடுத்தகைம் மணல்விடுத் தேனவ்
    வெதிரி மாண்டதிவ் வுலகமு மறிமே. 8

**த**ங்க மார்சுகக் களிப்பினை யெடுத்தே
    சாற்று ஞான்றுசி தம்பரத் திடையோர்
துங்க நாரரு ணின்றிதை யணிந்தே
    சொல்க வென்றுகண் மணிவட மெனக்கீ
செங்கை வேலவ பின்னையி லடியேன்
    செய்த கந்தசட் டியிலெதிர் வழக்குப்
பங்க மாமடை வாய்செய மெனவே
    பணித்த வாய்மையு நான்மறப் பேனோ. 9

அருணை நீள்கிரிப் பெயரின னரசே
யமுத மடப்பிடி நாயக முருகே
கருணை நாடெனை யெந்தவெவ் வளவாய்க்
கணிக்கு மானுட ருளரவ ரவர்க்காம்
பொருளை யீதலு முன்கடன் பிறிதென்
புகலு வேனடி யவர்க்கெளி யாயிவ்
வெருவை யூனுயிர்க் காப்புநின் னதுவென்
றிங்ங னம்பியுள் ளேனரு ணிதியே. 10

## வாழ்த்து

விழுமிய பொருளாய் நாளும்
மிளிர்குகக் கடவுள் வாழ்க
குழுமிய தொழும்பர் வாழ்க
குருவுடன் சீடர் வாழ்க
தொழுகுலத் தவர்கள் வாழ்க
துகளறு தவங்கள் வாழ்க
வழுவறு மறையும் ஆகமமுஞ்
சொன முடிவு வாழ்க.

பன்னிரு தடந்தோ ளெந்தை
பாதமென் கமலம் வாழ்க
தென்னவிர் திருவ தேவ
சேனையங் குறமின் வாழ்க
மின்அயில் நவிரம் வாழ்க
வியனரு ணகிரி வாழ்க
பன்னருட் குரவர் வாழ்க
பரிவுடைச் சீடர் வாழ்க.

## திருக்கந்தர் திருப்பல்லாண்டு

பொன்னுயர் நாட்டிறை புத்திரி தனைமன்றல்
புரிந்துசெந் தினைகாத்த
மின்னினை மாமணஞ் செய்தரு ணாடிய
வித்தகர் தமையாண்டு
நன்னல நல்கருள் வேந்தென விளங்குபு
நான்மறை களும்விரித்துப்
பன்னரும் பரமென விருக்குநந் தேவுக்குப்
பல்லாண்டு கூறுதுமே. 1

அன்னையின் மேம்படு கருணையி னாற்
குகனடிகளைப் புகழ்தாசன்
தன்னைமெய் யடியவ னாக்கவென் றகம்புறஞ்
சார்ந்துவந் தேற்றமதி
சொன்னவ னாயனு பூதிசொன் னவற்குறு
சூரறுத் தெவராலும்
பன்னவொ ணாநல நல்கிய குகனுக்குப்
பல்லாண்டு கூறுதுமே. 10

## சண்முக நாமாவளி

| | | | |
|---|---|---|---|
| ஹரஹர | சிவசிவ | சண்முக | நாதா |
| ஹரஹர | சிவசிவ | வென்முக | நாதா |
| ஹரஹர | சிவசிவ | பரம | விலாசா |
| ஹரஹர | சிவசிவ | வபய | குகேசா |
| அருண | கிரிபரவு | மருணெறி | நாதா |
| தரும | வுறுவர்புகழ் | சததள | பாதா |
| அரிபிர | மாதிக | டொழுவடி | வேலா |
| திருவடி | நாரவ | ருளமுறை | சீலா |
| எனினிய | குருநித | மெனுமதி | யீசா |
| சனனவெய் | தறவளி | தருபர | மேசா |
| பாசா | பாச | பாப | விநாசா |
| மாசே | றாத | மான | நடேசா |
| போஜா | வாஜா | பூஜகர் | நேசா |
| தேஜா | ராஜா | தேவஸ | மாஜா |
| தீஞ்சுவை | யருளொரு | திருவா | ரமுதே |
| ஓஞ்சர | வணபவ | வுருவே | யருவே. |

*திருச்சிற்றம்பலம்*